**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், ஆத்தூர்**
**முன்னிலை திரு.C. உதயசுந்தரம்.,பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்–2, ஆத்தூர்.**

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 10ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.214/2021</u>**

**(CNR No) TNSA140011222021**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசு சார்பாக – காவல் உதவி ஆய்வாளர், கருமந்துறை காவல் நிலையம். குற்ற எண்.37/2021 |
| // எதிர் // | | |
| எதிரிகள் | – | 1. கோவிந்தன் (60/2021), த/பெ. ராமகவுண்டர். 2. ஈஸ்வரன் (31/2021), த/பெ. கோவிந்தன். 3. லட்சுமணன் (35/2021), த/பெ. கோவிந்தன். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 324, 506(1)–ன் படியும், |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | 1ம் எதிரி கோவிந்தன் மீது இதசபிரிவுகள் 341, 294(பி), 506(1)–வின் படியும், 2ம் எதிரி ஈஸ்வரன் மீது இதச பிரிவுகள் 324, 506(1)–வின் படியும், 3ம் எதிரி லட்சுமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(1)–வின் படியும் |
| தீர்மானம் | – | இறுதியாக, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 341, 294(பி), 324, 506(1)–ன் கீழான குற்றச்சாட்டு எதுவும் இந்நீதிமன்றத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பது என முடிவுசெய்து 1ம் எதிரி கோவிந்தன் மீது |

| | | |
|---|---|---|
| | | இதசபிரிவுகள் 341, 294(பி), 506(1)–வின் படியும், 2ம் எதிரி ஈஸ்வரன் மீது இதச பிரிவுகள் 324, 506(1)–வின் படியும், 3ம் எதிரி லட்சுமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(1)–வின் படியும் அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் அவர்கள் குற்றவாளிகள் இல்லையென தீர்மானித்து எதிரிகளை 248 (1) Cr.P.C–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| புகார் நாள் | – | 30.01.2021 |
| எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | – | A1– A3–20.02.2021 |
| பிணையில் சென்ற நாள் | – | A1–A3–20.02.2021 |
| கோப்பு நாள் | – | 07.10.2021 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 19.07.2022 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 11.06.2026 |
| தீர்ப்புரை நாள் | – | 10.07.2026 |

எதிரிகளின் மீதான இந்த வழக்கானது இந்நீதிமன்ற கோப்பிற்கு கடந்த 07.10.2021 ம் தேதி எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசுத்தரப்பில் அறிவார்ந்த அரசு குற்றத்துறை வழக்குரைஞர் நிலை– 2 அவர்களும், எதிரிகள் தரப்பில் அறிவார்ந்த வழக்குரைஞர் திருவாளர்.C.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகி எடுத்துரைக்க இவ்வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இருதரப்பு எடுத்துரைத்ததைக் கேட்டும் இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

1) கடந்த 28.01.2021ந் தேதி மாலை 04.30 மணிக்கு கருமந்துறை காவல் நிலைய சரகம், வாதி தனது தோட்டத்திற்கு செல்ல இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது 1ம் எதிரி கோவிந்தன் கட்டையை குறுக்கே போட்டு வழிமறித்து தடுத்து நிறுத்தி கோவிந்தன் ஈஸ்வரனிடம் இவன் நம்ம பேச்சையும் கேட்கறதில்ல ஊர் பேச்சையும் கேட்காம நமக்கே இந்த தேவடியா பையன் சம்மன் அனுப்பிவிடறான் என்று கெட்ட வாத்தையால் திட்டினார் என்றும், மேலும் 2ம் எதிரி ஈஸ்வரன் கீழே கிடந்த கட்டையை எடுத்து வாதி லட்சுமணனின் பின்பக்க தலையில் அடித்ததில் ரத்தக்காயம் ஏற்பட்டு சொற்பகாயத்தை ஏற்படுத்தினார் என்றும், மேலும் 3ம் எதிரி லட்சுமணன் வாதி லட்சுமணனை பாத்து அந்த கண்டாரஓலி பையன பிடிங்கடா என்று சொல்லிக்கொண்டடே அங்கு கிடந்த இரும்பு கம்பியை எடுத்து அடித்ததில் மூக்கில் ரத்தக்காயம் ஏற்பட்டு சொற்பகாயம் ஏற்படுத்தினார் என்றும், மேலும் வாதி லட்சுமணன் வலி தாங்காமல் சத்தம்போட்டதை பார்த்து வாதியின் அப்பா சடையன் மற்றும் அம்மா உண்ணாயீ அண்ணன் வெங்கடேசன் ஆகியோர் சண்டையை விலக்கியபோது அவர்களை பார்த்து 1ம் எதிரி கோவிந்தன், 2ம் எதிரி ஈஸ்வரன் மற்றும் 3ம் எதிரி லட்சுமணன் ஆகியோர்கள் என்னைக்கா இருந்தாலும் உங்கைளை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1ம் எதிரி கோவிந்தன் மீது இதசபிரிவுகள் 341, 294(பி), 506(1)–வின் படியும், 2ம் எதிரி ஈஸ்வரன் மீது இதச பிரிவுகள் 324, 506(1)–வின் படியும், 3ம் எதிரி லட்சுமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(1)–வின் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கருமந்துறை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது ஒரு குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2) குற்ற இறுதி அறிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் சார்ந்திருக்கும் வழக்காவணங்கள் மற்றும் வாக்குமூலங்களின் நகல்கள் கட்டணமின்றியும் காலதாமதமின்றியும் குவிமுச பிரிவு 207–ன் படி எதிரிகளுக்கு வழங்கப்பட்டது.

3) எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவ எதிரிகள் தங்கள் மீதான இதச பிரிவுகள் 341, 294(பி), 324, 506(2)–ன் படியான குற்றங்களை மறுத்தார்கள். வழக்காவணங்களை பரிசீலனை செய்த பின்பும் இருதரப்பு எடுத்துரைத்ததைக் கேட்டபின்பும் 1ம் எதிரி கோவிந்தன் மீது இதசபிரிவுகள் 341, 294(பி), 506(1)–வின் படியும், 2ம் எதிரி ஈஸ்வரன் மீது இதச பிரிவுகள் 324, 506(1)–வின் படியும், 3ம் எதிரி லட்சுமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(1)–வின் படியும் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கிக் கூறி வினவ எதிரிகள் அக்குற்றச்சாட்டினையும் மறுத்தார்கள்.

4) எனவே அரசுத்தரப்பில் எதிரி மீதான வழக்கை நிருபிக்கும் விதமாக அ.த.சா.1 முதல் அ.த.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டது.

**5) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு**

இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.த.சா.1 முதல் அ.த.சா.7 சாட்சிகளை விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் கொடுத்த அ.த.சா.1 லட்சுமணன் சம்பவத்தை பற்றியும், சம்பவத்தில் தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும், மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.த.சா.2 சடையன், அ.த.சா.3 வெங்கடேசன், அ.த.சா.4 வனிதா, அ.த.சா.5 பாஸ்கர் ஆகியோர்கள் சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றியும், மகஜர் சாட்சியான அ.த.சா.6 ரமேஷ் மகஜர் சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் செய்தது பற்றியும், அ.த.சா.7 மோகன்ராஜ் புகாரை பெற்று வழக்கு பதிவுசெய்தது பற்றியும் இவ்வழக்கில் எதிரிகளை கைது செய்தும், புலன் விசாரணை மேற்கொண்டு 1ம் எதிரி கோவிந்தன் மீது இதசபிரிவுகள் 341, 294(பி), 506(1)–வின் படியும், 2ம் எதிரி ஈஸ்வரன் மீது இதச பிரிவுகள் 324, 506(1)–வின் படியும், 3ம் எதிரி லட்சுமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(1)–வின் படியும் குற்ற பத்திரிக்கை

தாக்கல் செய்தது தொடர்பாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6) அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியப் பகுதிகளை குவிமுச 313 (1) (ஆ)–ன் கீழ் விளக்கிக் கூறி கேள்வி கேட்க எதிரிகள் தங்கள் மீதான சாட்சியத்தை மறுத்தார்கள். இது தங்கள் மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றும், தங்கள் தரப்பில் சாட்சிகள் உள்ளது என்றும் சொன்னார். ஆனால், எதிரிகள் தரப்பி'ல் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. இத்துடன் இருதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7) **அரசுத்தரப்பு வாதம் பின்வருமாறு.**

அரசுதரப்பு வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் அ.த.சா.1 முதல் அ.த.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களிலிருந்தும் 1ம் எதிரி கோவிந்தன் மீது இதசபிரிவுகள் 341, 294(பி), 506(1)–வின் படியும், 2ம் எதிரி ஈஸ்வரன் மீது இதச பிரிவுகள் 324, 506(1)–வின் படியும், 3ம் எதிரி லட்சுமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(1)–வின் படியும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது அதனால் அவர் தண்டிக்கத்தக்கப்படவேண்டியவர் என்று வாதிட்டார்.

8) ஆனால், எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும், மேற்படி வழக்கின் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

9) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் 1ம் எதிரி கோவிந்தன் மீது

இதசபிரிவுகள் 341, 294(பி), 506(1)–வின் படியும், 2ம் எதிரி ஈஸ்வரன் மீது இதச பிரிவுகள் 324, 506(1)–வின் படியும், 3ம் எதிரி லட்சுமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(1)–வின் படியும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

10) இவ்வழக்கின் புகார்தாரரான அ.த.சா.1 லட்சுமணன் அவரது சாட்சியத்தில் கடந்த வருடம் ஜனவரி மாதம் தேதி ஞாபகம் இல்லை ஒரு நாள் ஆஜர் எதிரிகள் மீது நான் தாக்கல் செய்துள்ள சிவில் வழக்கினை மனதில் வைத்துக் கொண்டு நான் சின்னம்மாங்கோட்டில் உள்ள எனது காட்டிற்கு நான் சென்று கொண்டு இருந்த போது ஆஜர் எதிரிகள் 3 பேரும் அங்கு வந்து எங்கள் மீதே வழக்கு போடுகிறாயா தேவடியா மகனே என்று சொல்லி அசிங்கமாக பேசினார்கள் என்றும், ஈஸ்வரன் கட்டையால் எனது பின்னந்தலையில் அடித்தார் என்றும், லட்சுமணன் இரும்பு கம்பியால் எனது மூக்கில் அடித்தார் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

11) மேலும் சம்பவத்தில் நேரில் பார்த்த சாட்சியான அ.த.சா.2 சடையன் அவர்களது சாட்சியத்தில் கடந்த வருடம் தை மாதம் 8 ஆம் தேதி ஆஜர் எதிரிகள் மீது நாங்கள் தாக்கல் செய்துள்ள சிவில் வழக்கினை மனதில் வைத்துக் கொண்டு எனது மகனை சின்னம்மாங்கோட்டில் உள்ள எனது காட்டிற்கு வந்து கொண்டு இருந்த போது ஆஜர் எதிரிகள் 3 பேரும் அங்கு வந்து எங்கள் மீதே வழக்கு போடுகிறாயா தேவடியா மகனே என்று சொல்லி எனது மகனை அசிங்கமாக பேசினார்கள் என்றும், ஈஸ்வரன் கட்டையால் எனது மகனின் பின்னந்தலையில் அடித்தார் என்றும், லட்சுமணன் இரும்பு கம்பியால் எனது மகனின் மூக்கில் அடித்தார் என்றும், நான் சுமார் 30 அடி தூரத்தில் இருந்ததால் தடுக்க முடியவில்லை என்றும், நான் சத்தம் போட்டு கத்தியதில் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

12) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான அ.த.சா.3

வெங்கடேசன் அவர்களது சாட்சியத்தில் எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்மநதமாக பிரச்சனை இருந்து வந்தது என்றும், அதனால் நிலத்தை அளப்பதற்கு வி.ஏ.ஓ, சர்வேயர் ஆகியோர்களை அழைத்து அளந்துக்கொண்டோம் என்றும், மறுநாள் எனது தம்பி லட்சுமணன் இருசக்கரவாகனத்தில் காட்டுவேலையை முடித்துவிட்டு வந்துகொண்டிருந்தபொழுது எதிரிகள் மூவரும் அவரை வழிமறித்து அடித்துவிட்டார்கள் என்றும், எதிரி ஈஸ்வரன் கம்பியால் எனது தம்பியின் பின்னந்தலையில் அடித்துவிட்டார் என்றும், எதிரி கோவிந்தன் தடியால் எனது தம்பியின் உடம்பில் அடித்துவிட்டார் என்றும், எதிரி லட்சுமணனும் எனது தம்பியை அடித்துவிட்டார் என்றும், நான் தடுத்தும் என்னால் எதிரிகளை தடுக்க முடியவில்லை என்றும், மேலும் எதிரி ஈஸ்வரன் என்னையும், எனது தம்பியையும் தேவடியா மவனே, கண்டார ஓலி மவனே, உங்களை வெட்டாமல் விடமாட்டேன் என்று சொல்லி கொலை மிரட்டலும் விடுத்தார் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்,

13) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான அ.த.சா.4 வனிதா அவர்களது சாட்சியத்தில் தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், 1 வருடத்திற்கு முன்பாக ஒருநாள் மாலை நேரம் தண்ணீர் எடுக்க நான் சென்றபொழுது வழியில் எதிரிகளுக்கும், அ.சா.1 லட்சுமணனுக்கும் இடையே சண்டை நடந்து முடிந்திருந்தது என்றும், யார் யாரை அடித்துக்கொண்டார்கள் என்று தெரியவில்லை என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.த.சா.4 வனிதா இவரது சாட்சியத்தில் அரசு தரப்பு குற்றச்சாட்டிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

14) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான அ.த.சா.5 பாஸ்கர் அவர்களது சாட்சியத்தில் தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், 1 வருடத்திற்கு முன்பாக ஒருநாள் மாலை நேரம் எதிரிகளுக்கும், அ.சா.1 லட்சுமணனுக்கும் இடையே சண்டை நடந்ததாக எனது மனைவி வனிதா சொல்லி கேள்விப்பட்டேன் என்றும், யார் யாரை அடித்துக்கொண்டார்கள் என்று தெரியவில்லை என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.த.சா.5 பாஸ்கர் இவரது சாட்சியத்தில் அரசு தரப்பு

குற்றச்சாட்டிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

15) மேலும் பார்வை மகஜர் சாட்சியான அ.த.சா.6 ரமேஷ் அவர்களது சாட்சியத்தில் கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் தேதி, மாதம் ஞாபகமில்லை என்றும், காலை நேரத்தில் நான் சின்னம்மாங்கோட்டில் உள்ள கோவிலுக்கு சென்றிருந்த போது அங்கே வந்த கருமந்துறை போலிசார் சண்டை நடந்தது சம்பந்தமாக விசாரித்து மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றும், நேரில் வந்த விசாரணை செய்ததற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

16) மேலும் அ.த.சா.7 மோகன்ராஜ் அவர்களது சாட்சியத்தில் கடந்த 30.01.2021 அன்று நான், வட்ட ஆய்வாளராக கருமந்துறை காவல் நிலையத்தில் பணிபுரிந்தபொழுது, கருமந்துறை காவல் நிலைய பொறுப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து என்பவர் நிலைய அலுவலலில் இருந்தபொழுது, கருமந்துறை காவல் நிலைய த.கா காந்தி என்பவர், சேலம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த புகார்தாரர் திரு.லட்சுமணன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று வந்து, காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து அவர்களிடம் ஒப்படைத்ததை, திரு.வீரமுத்து அவர்கள் பரிசீலனை செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப எதிரிகளான கோவிந்தன், ராமர், ஈஸ்வரன், திருப்பதி, கோவிந்தராஜ் மற்றும் பாப்பாயி ஆகியோர்கள் மீது நிலைய குற்ற எண்.37/2021 இ.த.ச. பிரிவுகள் 147, 148, 341, 294(b), 324, 506(2) 379 இதச–விலிருந்து 341, 294(b), 324, 506(1)–இதச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

17) மேலும் அ.த.சா.1 லட்சுமணன் அவர்களது குறுக்கு விசாரணையில் ஆஜர்

எதிரிகள், எனது உடன் பங்காளிகள் என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது என்றும், என்னை தவிர வேறு யாருக்கும் இவ்வழக்கில் காயம் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான்தான் புகார்தாரரும், பாதிக்கப்பட்டவரும் என்று சொன்னால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான் கடந்த 19.07.2022 தேதியில் அளித்துள்ள சாட்சியத்தில் எதிரிகள் என்னை அடித்ததாக தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான் என்றும், இந்நிலையில் எங்களுக்கிடையே சமதானம் ஏற்பட்டதால் இவ்வழக்கில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவேண்டாம் என்று சொன்னால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள சமரச மனுவில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் ஆமாம் என்றும், அந்த சமரச மனு அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் எங்களுக்கிடையே சமதானம் ஏற்பட்டதால் இவ்வழக்கில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவேண்டாம் என்று சொன்னால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளதில் இருந்து அ.த.சா.1–ம், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

18) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.த.சா.2 சடையன் அவரது குறுக்கு விசாரணையில் ஆஜர் எதிரிகள், எனது உறவினர்கள் என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான் புகார்தாரரின் தந்தை என்று சொன்னால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான் கடந்த 19.07.2022 ம் தேதியில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான் என்றும், இந்நிலையில் எங்களுக்கிடையே சமதானம் ஏற்பட்டதால் இவ்வழக்கில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவேண்டாம் என்று சொன்னால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள சமரச மனுவில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் ஆமாம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

19) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.த.சா.3 வெங்கடேசன் அவரது குறுக்கு விசாரணையில் ஆஜர் எதிரிகள், எனது உறவினர்கள் என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான் கடந்த 20.07.2023ம் தேதியில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான் என்றும், இந்நிலையில் எங்களுக்கிடையே சமதானம் ஏற்பட்டதால் இவ்வழக்கில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவேண்டாம் என்று சொன்னால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள சமரச மனுவில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் ஆமாம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

20) மேலும் வழக்கின் விசாரணை குறித்து அரசு தரப்பில் சாட்சியம் அளித்த அ.த.சா.1 முதல் அ.த.சா.3 வரையிலானவர்களும், எதிரிளும் சமரசமாக செல்லவதாக இந்நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்பதும், இந்நிலையில் அ.த.சா.1 லட்சுமணன் அவர்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே குடும்ப பிரச்சனை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்பதும், மேற்படி சம்பவம் தொடர்பாக எதிரிகளுக்கும் அ.த.சா.1–ற்கும் முன்விரோதம் இருந்து வருகிறது என்பதும் மேலும், அ.த.சா.1–ம், எதிரிகளும் சேர்ந்து இந்நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல் செய்துள்ளதிலிருந்து இவ்வழக்கில் மேல்நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்று அ.த.சா.1 கருதுவதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. மேலும் மேற்படி காரணங்களால் அ.த.சா.1 சாட்சியம் அளித்துள்ளபடி இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதாக என்பதிலேயேயும், அ.த.சா.1 புகார் வாக்குமூலத்திலும், தனது முதல் விசாரணையிலும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இருப்பதை பார்க்கும்போது சம்பவம் நடைபெற்றதா என்பதிலேயே இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

21) மேற்படி அ.த.சா.1 தன் புகார் வாக்குமூலத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், இரு தரப்பினர்களும் சமதானமாக சென்றுவிட்டதாலும், மேல்நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டாம் என்று சாட்சியம் அளித்துள்ளதாலும், மேலும் அ.த.சா.1–ம் மற்றும் எதிரிகளும் நெருங்கிய உறவினர்கள் என்பதாலும், மேற்படி நபர்களின் உறவு முறையை கருத்திற்கொண்டும், மேலும் அரசு தரப்பில் அளித்துள்ள சாட்சியம் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்க பயன்படுவதாக இல்லையென இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

22) மேலும் அ.த.சா.1 முதல் அ.த.சா.6 வரையிலான சாட்சிகள் புகார் வாக்குமூலத்திற்கும், அரசுதரப்பு குற்றச்சாட்டிற்கும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதை பார்க்கும்போது இவர்களது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வகையிலும் உதவுவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

23) இந்நிலையில் வழக்கின் விசாரணை குறித்து அரசு தரப்பில் சாட்சியம் அளித்த அ.த.சா.7 மோகன்ராஜ் அவர்களின் சாட்சியத்தை மட்டும் நம்பி அரசு தரப்பு வழக்கு ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக எவ்வகையிலும் முடிவிற்கு வர இயலாது.

24) ஆகவே, மேற்படி சாட்சியங்களின் சாட்சியங்களை ஆராயும்போது அரசு தரப்பு வழக்கை நிருபிக்கும் வகையில் எந்த ஒரு சாட்சிகளும் சாட்சியம் அளிக்காததால், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குகிறது.

25) இறுதியாக, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 341, 294(பி), 324, 506(1)–ன் கீழான குற்றச்சாட்டு எதுவும் இந்நீதிமன்றத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு

அளிப்பது என முடிவுசெய்து 1ம் எதிரி கோவிந்தன் மீது இதசபிரிவுகள் 341, 294(பி), 506(1)–வின் படியும், 2ம் எதிரி ஈஸ்வரன் மீது இதச பிரிவுகள் 324, 506(1)–வின் படியும், 3ம் எதிரி லட்சுமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(1)–வின் படியும் அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் அவர்கள் குற்றவாளிகள் இல்லையென தீர்மானித்து எதிரிகளை 248 (1) Cr.P.C–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

26) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை

**Particulars under rule 106 of Criminal Rules of Practice 2019.**

| Sl.No | Case No: | : | **CC No.214/2021** | |
|---|---|---|---|---|
| 2. | Name of the Police Station and Crime Number of the offence | : | Karumandurai P.S<br>Cr.No :37/2021<br>Offence : 341, 294(b), 324, 506(1) IPC | Description of the Accused |
| 3. | Name | : | A1- Govinthan, A2- Eashwaran, A3-Lakshmanan | |
| 4. | Father's Name | : | A1- Rama Gounder, A2-Govinthan, A3-Govinthan | |
| 5. | Occupation | : | A1- A3 - Farmer | |
| 6. | Residence | : | A1- A3, Chinnamankodu, Karumandurai, Pethanaiyakenpalaiyam, Salem Dt. | |
| 7. | Age | : | A1- 60/2021, A2-31/2021, A3-35/2021 | |
| 8. | Occurrence | : | 28.01.2021 | Date of |
| 9. | Complaint | : | 30.01.2021 | |
| 10. | Apprehension or Appearance | : | A1- A3-20.02.2021 | |
| 11. | Release on bail | : | A1-A3-20.02.2021 | |
| 12. | Commitment | : | --- | |
| 13. | Commencement of trial | : | 19.07.2022 | |
| 14. | Closure of trial | : | 11.06.2026 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | Sentence or order | : | 10.07.2026 | |
| 16. | Service of copy of judgment or finding on accused | : | Acquittal | |
| 17. | Explanation of delay | | --- | |

**<u>CASE SUMMERY AS PER THE CIRCULAR OF HON'BLE HIGH COURT, MADRAS IN R.O.C. NO. 814/2020/RG/F1, DT. 07.04.2021</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i | the period of remand of the accused | : | A1-A3-20.02.2021 | | |
| ii | the date of filing of the complaint /final report in the Court | : | 19.06.2021 | | |
| iii | the date of committal of the case to the Court of Session | : | --- | | |
| iv | the date of questioning of the accused under section 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | : | 09.11.2021 | | |
| v | filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts; except routine petitions like petitions under section 317 of the Code; | : | Nil | | |
| vi | date of examination in-chief and cross-examination of witness | : | P.W1 | 19.07.2022 | 19.07.2022 |
| | | | P.W2 | 19.07.2022 | 19.07.2022 |
| | | | P.W3 | 20.07.2023 | 20.07.2023 |
| | | | P.W4 | 20.07.2023 | 20.07.2023 |
| | | | P.W5 | 20.07.2023 | 20.07.2023 |
| | | | P.W6 | 08.03.2024 | 08.03.2024 |
| | | | P.W7 | 11.06.2026 | 11.06.2026 |
| vii | date of examination of the accused under section 313 of the Code | : | 22.06.2026 | | |
| viii | details of abscondence of an accused and his appearance / production, as the case may be | : | --- | | |
| ix | grant of stay by superior courts and the result thereof. | : | Nil | | |

27) மேற்படி தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினி மூலம் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.10 00:18:43 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
ஆத்தூர்.

**பின்இணைப்பு:**

**1. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.த.சா.1 | லட்சுமணன் |
| அ.த.சா.2 | சடையன் |
| அ.த.சா.3 | வெங்கடேசன் |
| அ.த.சா.4 | வனிதா |
| அ.த.சா.5 | பாஸ்கர் |
| அ.த.சா.6 | ரமேஷ் |
| அ.த.சா.7 | மோகன்ராஜ் |

**2. அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள் :–**

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.2 | பார்வை மகஜரில் உள்ள 2–வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.6 | எதிரிகள் நீக்கல் அறிக்கை |

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.7 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.8 | விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.9 | சமரச மனு |

3. **அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்கள்:** –

---இல்லை---

**4. எதிரிகள் தரப்பில் சாட்சிகள், ஆவணங்கள் சான்றுபொருட்கள்:**–

---இல்லை---

**குறிப்பு:**

1. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.

2. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையிலிருந்தார்கள்.

3. வழக்கின் முடிவு பற்றிய விவரம் காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.10 00:18:52 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
ஆத்தூர்

Note: CSI order Uploaded date in 10.07.2026